# <u>சாதாரணக்கூட்டம்</u>

**2022–ம் ஆண்டு ஜுலை மாதம் 28–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வடலூர் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.**

**முன்னிலை : திரு. சு. சிவக்குமார், நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி.**

## <u>பொருள் எண். 1</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் ஆணை ந.க.எண். 396/2020/பி1 நாள். 04.07.2022 ல் தெரிவித்துள்ளவாறு தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் பணிகள் மேற்க்கொள்ள பரப்புரையாளர்கள் (மற்றும்) மேற்பார்வையாளர்களை பணியமர்த்து வதற்கான ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை Vipras, adz மூலம் தினகரன் மற்றும் Business Line All Editions தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை நகராட்சி வாரியாக ரூ. 12770/- யினை The Commisioner, Maraimalai nagar, Municipality என்ற பெயருக்கு தொகையினை வழங்குமாறு தெரிவித்துள்ளனர். எனவே அதனை தொடர்ந்து ரூ. 12770/- யினை The Commissioner, Maraimalai nagar Municipality அவர்களின் பெயருக்கு வழங்கிடவும், அதற்கான செலவினம் ரூ. 12770/- (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**கோப்பு எண். 456 /2021/எச்1**

<u>அலுவலக குறிப்பு</u> **:**
**பொது சுகாதார நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.**

## <u>பொருள் எண். 2</u>

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வடலூர் நகராட்சியின் எல்லைக்குட்ப்பட்ட 27 வார்டுகளிலும், எனது குப்பை எனது பொறுப்பு என்ற தலைப்பிலும் (தூய்மையான நகருக்கான மக்கள் இயக்கம்) பெருமளவில் மக்கள் பங்களிப்புடன் பொது இடங்களை சுத்தம் செய்தல் வேண்டும். தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு வரைபடங்கள் வரைந்திடவும், கலைநிகழ்ச்சிகள் நடத்திடவும், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வாங்கிட, பொது மக்களை ஊக்கப்படுத்திட பொது சுகாதாரப்பிரிவுக்கான பொருட்கள் வாங்கி வழங்கிடவும், இதன் தொடர்பாக நடத்தப்படும் அனைத்து நிகழ்வுகளுக்கும் செலவிடப்படும் அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ. 3.00 லட்சத்திற்கு ( ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**கோப்பு எண். 356 /2022/எச்1**

<u>அலுவலக குறிப்பு</u>
**பொது சுகாதாரம் நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்க்கொண்டு பட்டியல் தொகை வழங்கயதை மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 3

வருகின்ற 75வது சுகந்திர தினத்தை முன்னிட்டு பாரதப் பிரதமர் அவர்களின் அனைத்து வீடுகளில் தேசிய கொடி ஏற்றும் திட்டம் சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை முன்னிட்டு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை செ.மு.ந.க.எண். 873/அ3/2022 நாள் 22.07.2022ல் வடலூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 11068 வீடுகளுக்கு தேசிய கொடிகள் தைத்து விநியோகம் செய்ய கடலூர் பெண்கள் தையல் தொழிற் கூட்டுறவு சங்கம் இ1560 கடலூர் அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டு ஒரு கொடிக்கு ரூ. 20/- வீதம் 11068 கொடிகள் வாங்க ரூ. 221360/- ஆகும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு :**

**செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 4

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கணபதி நகர் பகுதியில் அமைந்துள்ள பூங்கா இடத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் விளையாட்டு திடல் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி கணபதி நகர் பூங்கா இடத்தின் ஒரு பகுதி திருமதி. அமுதா க/பெ கலையரசன் என்பவர் தனக்கு சொந்தமானது என கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்ற கூடுதல் அரசு வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணமாக ரூ. 25000/- வழங்க கோரியுள்ளார். மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின்அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

**செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 5

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தின்படி வடலூர் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யத்தில் (2021 2022) தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறை வழிகாட்டுதலின் படி Untied Grant (2021 2022) ல் ரூ. 49.84 லட்சத்தில் பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளதில், இந்நகராட்சியில் கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு கீழ் காணும் பணி மேற்க்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 01 இராமமூர்த்தி ரெட்டி நகர் 1 வது தெருவில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணி ( UNI CODE 182001R032) | 10.00 |
| 2 | வார்டு எண். 01 இராமமூர்த்தி ரெட்டி நகர் 4 வது தெருவில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணி ( UNI CODE 182001R034) | 10.00 |
| 3 | வார்டு எண். 01 இராமமூர்த்தி ரெட்டி நகர் 5 வது தெருவில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணி ( UNI CODE 182001R035) | 10.00 |
| 4 | வார்டு எண். 13 காமராஜர் நகர், 4 வது தெற்கு தெருவில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணி ( UNI CODE 182012R280 ) | 19.84 |
| | மொத்தம் | 49.84 |

**கோப்பு எண். 202/2022/அ1**

**அலுவலக குறிப்பு :** **பொது மக்கள் நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்க்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 6

தமிழ்நாடு பூங்கா, விளையாட்டுத்திடல் மற்றும் திறந்த வெளியிடம் (பாதுகாத்தல் மற்றும் முறைபடுத்துதல்) சட்டம்– 1959ன்படி வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனுமதி பெறப்பட்ட மனைப்பிரிவு மற்றும் நகர் ஊரமைப்புத்துறை மூலம் ஒப்புதல் செய்த மனைப்பிரிவில் உள்ள பூங்கா, திறவிடம் மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற இடங்கள் மொத்தம் 37 எண்ணிக்கையில் உள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண். 5094/2022/TP2 நாள்.08.03.2022ந் தேதிய கடிதத்தில் பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் திறந்த வெளியிடம் பட்டியலை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, 37 எண்ணிக்கை கொண்ட பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் திறந்த வெளியிட பட்டியலை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

1. வடலூர் நகராட்சியில் மொத்தம் 37 எண்ணிக்கை கொண்ட பூங்காக்கள், விளையாட்டு மைதானம், திறவிடம் உள்ளது. மேற்கண்ட இடங்கள் யாவும் பூங்கா பாதுகாத்தல் மற்றும் முறைபடுத்தல் சட்டம் 1959–ன் படி தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி தயார் செய்யப்பட்ட பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் திறவிடம் பட்டியலை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.
2. நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண். 7

வடலூர் நகராட்சியின் பொது சுகாரப்பிரிவில் பணியாற்றி வரும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், அலுவலக உதவியாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் (கூ.பொ) அவர்களுக்கும் **2022-2023**ம் ஆண்டிற்கு காலணி வழங்கப்படாமல் உள்ள நிலையில், தற்சமயம் காலணி வழங்குவதற்கு துப்புரவு ஆய்வர் அவர்கள் **05.07.2022** அன்று குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, துப்புரவு ஆய்வர் குறிப்பினை ஏற்று மேற்காணும் பணியாளர்களுக்கு காலணி வழங்கிடவும், அதற்கான தோரய செலவினம் ரூ.**10,000/-** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**கோப்பு எண்.444 /2022/எச்1**

**<u>அலுவலக குறிப்பு :</u> பொது சுகாதார பணியார்களின் நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 8

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 20, சேராக்குப்பம் புல எண். 33ல் சர்க்கார் புறம்போக்கு பொது மயானம் அமைந்துள்ள இடத்தில் செயற்பொறியாளர், நீவது வெளளாறுவடி நிலகோட்டம், விருத்தாசலம் அவர்கள் அய்யன் ஏரி அருகில் மேற்கண்ட இடத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்க தடையின்மை சான்று வழங்கியதன் அடிப்படையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை (LPG) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் இடத்தில் பணிசெய்ய அவசரஅவசியம் கருதி மண் பரிசோதனை செய்ய விலைபுள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | Span Check Associates,<br>Structural & Geo Consultant,<br>Cuddalore - 607002 | 27500/- |
| 2 | Progressive Soil Consultant,<br>No.B1 Floor, II Cross,<br>Karikal - 609602 | 29000/- |
| 3 | Gedo Testing Lab,<br>No.26,Vysial Street.<br>Pudhucherry - 605001 | 30000/- |

**கோப்பு எண். 67 /2022/இ1**

**அலுவலக குறிப்பு:**

1. **வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் Span Check Associates, Structural & Geo Consultant, Cuddalore-607002 அவர்கள் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மண் பரிசோதனை செலவீனம் தொகை ரூ. 27500/—மேற்காணும் நிறுவனத்திற்கு இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 9

வடலூர் நகராட்சியின் பொது சுகாரப்பிரிவில் சுகாதாரப்பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN-31-BH-9135 டிப்பர் லாரிக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று 2022—2023 ஆண்டிற்கு வாங்குவதற்கு வாகனத்தின் பழுதுகளை சரி செய்திட வாகனத்தின் பழுதுகள் குறித்து வாகனத்தினை நேராய்வு செய்து மெக்கானிக் மூலம் விலை விவரப்பட்டியல் ஓட்டுனர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் (கூ.பொ) மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து வாகனத்தின் பழுதுகளை சரிசெய்திடவும் அதற்கான செலவினம் ரூ. 1,41,000/—க்கு ( ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**கோப்பு எண். 392/2022/எச்1**

**அலுவலக குறிப்பு :**

**பொது சுகாதார நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 10

மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குனர் திரு சி. சுப்ரமணியன் எம்.எஸ்.சி எம்.எட்,எம்.பில் அவர்களின் கடிதம் ந.க.எண் 1549/இ/2020 நாள்: 03.06.2022 ல் பிரதம மந்திரி மட்சய சம்பத யோஜனா (MMSY) 2020/21ன் கீழ் 40% மானியத்தில் மீன் விற்பனை நிலையம் அமைத்து நடத்திட வடலூர் நகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை முன்புறம் உள்ள இடத்தில் மீன்விற்பனை நிலையம் அமைத்திட ஏதுவாக நிலம் ஒதுக்கீடு செய்து தர வேண்டி வரப்பெற்ற கடிதத்தினை தொடர்ந்து மேற்படி திட்டம் (KIOSK) மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் திட்டம் என்பதால் வடலூர் நகராட்சி உழவர் சந்தை பின்புறம் இடம் ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:

**மேற்படி திட்டமானது மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு, இணையம் லிட், சென்னை அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் மீன் விற்பனை நிலையம் அமைத்திட இடம் ஒதுக்கீடு செய்து வழங்கலாம்.**

## பொருள் எண். 11

வடலூர் நகராட்சியின் பொது சுகாரப்பிரிவில் சுகாதாரப்பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN-31-H-8721 டிப்பர் லாரிக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று 2022–2023 ஆண்டிற்கு வாங்குவதற்கு வாகனத்தின் பழுதுகளை சரிசெய்திட வாகனத்தின் பழுதுகள் குறித்து வாகனத்தினை நேராய்வு செய்து மெக்கானிக் மூலம் விலை விவரப்பட்டியல் துப்புரவு மேற்பார்வையாளர் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து வாகனத்தின் பழுதுகளை சரி செய்திடவும், அதற்கான செலவினம் ரூ.1,80,500/-க்கு ( ரூபாய் ஒரு லட்சத்து என்பதாயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**கோப்பு எண். 393/2022/எச்1**

<u>அலுவலக குறிப்பு :</u>

**பொது சுகாதார நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 12

வடலூர் நகராட்சிக்கு ஆபத்தாரணபுரம் புல எண்.61/3ல் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 08.06.2022ம் தேதிய ந.க.எண். 7628/22/MA1ல் அனுமதி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழான முரசொலி மற்றும் தி டைம்ஸ் ஆப் இந்தியா ஆகிய பத்திரிக்கைகளில் 12.07.2022-ம் தேதியில் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் மூலமாக 28.07.2022ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் மேற்படி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ஆகும் விளம்பரக் கட்டணம் பொதுநிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண்.136/2022/அ1**

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் பதிவு செய்து அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 13

வடலூர் நகராட்சி 19.93 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். 2011 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 9.736 குடும்பங்களும், அக்குடும்பங்களின் மொத்தம் 39,514 மக்கள் வசித்து வருகின்றனர். தூய்மை இந்தியா திட்டபரப்புரையாளர்கள் மூலம் நகரில் மொத்தம் உள்ளவீடுகளையும், வணிக நிறுவனங்களையும் கணக்கெடுப்பு செய்ததில், 11,872 குடும்பங்களும், மக்கட் தொகை 48108 எனவும், வணிக நிறுவனங்கள் 957 எனவும் கணக்கெடுப்பு செய்துள்ளனர். மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ராமலிங்கவள்ளலார் ஆலயம் அமையப் பெற்றுள்ளமையால் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் வடலூர் நகருக்குவந்து செல்கின்றனர். இதன் காரணமாக வர்த்தகம் நிறைந்த நகரமாக உள்ள நிலையில் பேருந்துநிலையம், தினசரி மார்க்கெட், கடை வீதி, கோயில் பிரகாரங்கள் மற்றும் கல்வி பயிலும் நோக்குடன் நகரில் கிராமப்புறங்களிலிருந்து குடியேறிய குடும்பங்கள் வாயிலாக திடக்கழிவுகள் அதிக அளவில் சேகரமாகின்றன.

அரசு ஆணை எண். 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ம.ப.3) நாள்.30.04.1997ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின் படி திருத்திய கருத்துரு கீழ்காணும் விவரப்படி

**கருத்துரு**

| வ. எண். | வேலைவிபரம் | கணக்கீடு | அளவுகோலின்படி தேவை |
|---|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3 பேர் வீதம் 11872 குடியிருப்புகளுக்காக | 11872/250x3 | 142 |
| 2 | டாடா ஏஸ் வாகனம் | 3x3 | 9 |
| 3 | லாரிகள் 2 Nos (4 பேர் வீதம்) | 2x4 | 8 |
| 4 | பேருந்து நிலையம் | 1x4 | 2 |
| 5 | டிராக்டர் | 1x3 | 3 |
| 6 | தினசரி மார்க்கெட் | 1x2 | 2 |
| 7 | கலவை உரக்கிடங்கு | 1x2 | 2 |
| 8 | இலவசகழிப்பறை | 1x2 | 2 |
| தேவைப்படும் மொத்த பணியாளர்கள் | | | 170 |

| | | |
|---|---|---|
| 1 | அரசு ஆணை (நிலை) எண். 101ன் படியான அளவுகோலின்படி தேவைப்படும் தூய்மை பணியாளர் எண்ணிக்கை | 170 |
| 2 | அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியிடங்கள் | 22 |
| 3 | தற்போது பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் | 18 |
| 4 | காலியிடம் | 04 |
| 5 | சுய உதவிக்குழுக்கள்/தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக அளவுகோலின் படி பணி மேற்கொள்ள தேவைப்படும் பணியாட்கள் | 152 |

## நகராட்சி பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிமேற்கொள்ளுதல் மதிப்பீட்டு தொகை கணக்கிடுதல்

நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் நிரந்தரமாக துாய்மைபணியாளர்களை நியமித்து துப்புரவு பணியினை மேற்கொண்டால் மேற்படி 152 பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதியம் மற்றும் இதர படிகள் விபரம்

### ஒரு நபருக்கானமாத ஊதியம்

| | | |
|---|---|---|
| அடிப்படைஊதியம் | – | 15700.00 |
| அகவிலைப்படி | – | 4867.00 |
| வீட்டு வாடகைப்படி | – | 700.00 |
| மருத்துவப்படி | – | 300.00 |
| சலவைப்படி | – | 200.00 |
| **மொத்தம்** | – | **21767.00** |

152 பணியாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு வழங்க வேண்டிய ஊதியம் 152 x 21767 = ரூ. 33,08,584.00

| | |
|---|---|
| (அ) 152 நபர்களுக்கு 12 மாதத்திற்கு வழங்கப்படவேண்டிய ஊதியம் | 3,97,03,008.00 |
| (இ) சீருடை & தையற்கூலிநபர் 1க்கு 2000 வீதம் | 3,04,000 |
| (ஈ) காலணி (1 நபருக்கு ரூ.350/–) | 53,200.00 |
| பாதுகாப்புஉபகரணங்கள் 1 நபருக்கு ரூ.3465/– | 5,26,680.00 |

12 மாதங்களுக்குஆகும் ( நிரந்தர பணியாளர்கள்) மொத்தசெலவினம் ரூ. 4,05,86,888.00

### சுய உதவிக்குழு அல்லது ஒப்பந்தம் வாயிலாக மனித சக்தியை பெற்று

### (Man Power) துாய்மை பணிமேற்கொள்ள மதிப்பீட்டு தொகை மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி விவரப்படி கணக்கிடுதல்

### (out sourcing of man power from SHG/Contract Basis)

| | | |
|---|---|---|
| ஒப்பந்தஅடிப்படையில்அமர்த்தப்படவேண்டியபணியாளர்கள் | - | 152 |
| மாவட்டஆட்சியர் அவர்களின் தினக்கூலிவிவரப்படிசந்தைவிகிதம் (Schedule of rate 2021-22) | - | ரூ. 445.00 |
| 1 நபருக்கு 30 நாட்களுக்குவழங்கவேண்டியதொகை | - | ரூ. 13350.00 |
| 152 பணியாளர்களுக்குவழங்கவேண்டியமாதசம்பளம் | - | ரூ. 20,29,200.00 |

| | | |
|---|---|---|
| 152 பணியாளர்களுக்குகானஊதியம் | 20,29,200 x 12 | ரூ. 2,43,50,400 |
| ஒருமாதத்திற்கு ஆகும் செலவு(ESI 1.75%) | 35511x12 | 426132 |
| EPF 13% | 263796x12 | 3165552 |
| Uniform Safety Equipments 5% | 101460 x 12 | 1217520 |
| Administrative Charges 5% | 101460 x12 | 1217520 |
| **Total** | **2531427x12** | **30377124** |

| | |
|---|---|
| 12 மாதங்களுக்குசம்பளம் | ரூ. 24350400 +<br>ரூ. 6026724<br>ரூ.3,03,77,124 |

| ஒப்புநோக்குப்பட்டியல் | |
|---|---|
| 152 தூய்மை பணியாளர்களை நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் (நிரந்தர பணியாளராக) பணிநியமனம் செய்யப்பட்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேசசெலவுத் தொகை | ரூ. 4,05,86,888.00 |
| மேற்கண்ட பணியினை சுய உதவிக்குழுக்கள்/தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக மேற்கொண்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை | ரூ. 3,03,77,124.00 |
| **வித்தியாசம்** | **ரூ. 1,02,09,764.00** |

எனவே, அட்டவணையில் கண்டுள்ள 152 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையின் ஊதியத்துடன் இதர பயன்களையும், சேர்த்து சுய உதவிக்குழுக்கள் அல்லது தனியார் ஒப்பந்த அடிப்படையில் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள ஊதியத்தின்படி நியமித்துக் கொள்ளவும், அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவிக்கும் தினக்கூலி விவரப்படி சந்தை விகிதத்தில் அவ்வூதியத்தினை காலமுறைப்படி உயர்த்தி கொள்ளவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்துருவின் மீது நிர்வாக அனுமதி உத்திரவு வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் வழிமுறையாக நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை–28 அவர்களின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண். 515/2022/எச்1**

**அலுவலக குறிப்பு :**

**மன்றம் பதிவுசெய்யலாம்.**

## <u>பொருள் எண். 14</u>

வடலூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவுக்கு தேவைப்படும் கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கிட நகர் மன்றத்தில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து 19.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | SISCO<br>No. IDNCO Industrial Estate<br>Gandhi Nagar,Vellore. | GREEN AGRO ENVIRONMENT SERVICES<br>No.6, Car Street (Opp.Canara Bank) Maduranthagam | SOUTHERAN SOLID WASTE MANAGENT SERVICE<br>No.39, Balagopalapuram Street, Pollachi |
|---|---|---|---|---|
| 1 | சுண்ணாம்பு பவுடர், பிளீச்சிங் பவுடர், லைசால், பினாயில், கையுறை மற்றும் முககவசம் சப்ளை செய்யும் பணி | சுண்ணாம்பு 1 கிலோ– 13.57<br>பிளிச்சிங் பவுடர் 1 கிலோ – 54.28<br>லைசால் 1 லிட்டர் –160.48<br>பினாயில் 1 லிட்டர்– 112.10<br>கையுறை 1 – 10.62<br>முககவசம் 1– 7.08 | சுண்ணாம்பு 1 கிலோ–14.16<br>பிளிச்சிங் பவுடர் 1கிலோ– 57.82<br>லைசால் 1 லிட்டர்– 171.01<br>பினாயில் 1லிட்டர் –115.64<br>கையுறை 1 – 11.08<br>முககவசம் 1–9.44 | சுண்ணாம்பு 1 கிலோ–15.34<br>பிளிச்சிங் பவுடர் 1 கிலோ– 59.00<br>லைசால் 1 லிட்டர்– 177.00<br>பினாயில் 1லிட்டர் –118.00<br>கையுறை 1 – 14.16<br>முககவசம் 1–10.62 |

**கோப்பு எண். 369/2022/எச்1**

## <u>அலுவலக குறிப்பு</u>

**மேற்கண்டபணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் SISCO, No. IDNCO Industrial Estate Gandhi Nagar என்ற நிறுவனம் வழங்கியுள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 15

வடலூர் நகராட்சியில் அமைந்துள்ள பூங்காக்கள், விளையாட்டு மைதானம், திறவிடம் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ய Autocad வரைபடங்கள் தயாரித்தமைக்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 25000/– பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 16

வடலூர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022– 2023 திட்டத்தின்கீழ் ரூ. 48.00 லட்சத்தில் வார்டு எண் 22 மாருதி நகர், வார்டு எண் 25 சவேரியார் நகர் மற்றும் எண் வார்டு 15 இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை தொடங்கி வைக்க வருகை தரும் தமிழக வேளாண்மை துறை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும் வரவேற்று 07.07.2022 தேதிய தினமலர் நாளிதிழில் விளம்பரம் செய்த வகையில் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.38981/– (ரூபாய் முப்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து என்பத்து ஒன்று மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 17

வடலூர் நகராட்சியில் 2022–2023 ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டப்பணிகள், பொதுநிதி பணிகள், பொது சுகாதாரம், தெருவிளக்கு பராமரித்தல் பணிகள், குடிநீர் பராமரிப்பு பணிகள், பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளும் வாகனங்கள் பராமரிக்கும், டீசல் செலவினம் மற்றும் அனைத்து பிரிவு பணியாளர்களின் ஊதியம் போன்ற செலவினத்திற்கான மதிப்பீடு பட்டியல் (Budget) தயார் செய்து கணினியில் பதிவேற்றம் செய்திட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 18

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி தமிழக அரசு பொறுப்பேற்ற ஒராண்டுகளில் செய்த சாதனைகளை செய்தித்தாள்களில் விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வடலூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகள் குறித்து கீழ்காணும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

1. மாலை தமிழகம் - ரூ. 14700/-
2. மாலை தமிழ்நாடு - ரூ. 12600/-

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

## <u>பொருள் எண். 19</u>

அரசாணை நிலை எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2021/ஆர்1 நாள் 01.04.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி 01.04.2022 முதல் சொத்துவரி/காலிமனை வரியினை பொது சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதிற்கிணங்க இந்நகர்மன்ற தீர்மான எண். 19 நாள் 11.04.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்டு Times of India Chennai ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 98658/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு நகராட்சி பொதுநிதியில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

## <u>பொருள் எண். 20</u>

வடலூர் நகராட்சியின் வார்டு எண். 27 வெங்கட்டங் குப்பம் ஆதியன் காலனி சுடுகாடு பாதையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆர்.சி.சி சிமெண்ட் பைப் சிறுபாலம் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளதால், பொது மக்கள் போக்குவரத்திற்கு பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின் போது அதீத வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது மேற்கண்ட சிறுபாலம் வழியாக மழை நீர் வெளியேற்ற முடியாத சூழ்நிலை ஏற்படும். மேலும் அருகிலுள்ள குடியிருப்புகளில் வெள்ள நீர் சூழும். எனவே மேற்கண்ட பழுதடைந்த பாலத்தை அகற்றி புதியதாக ஆர்.சி.சி சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1.25 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண். 554/2022/இ1**

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

## <u>பொருள் எண். 21</u>

வடலூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவு இந்நகராட்சியில் மொத்தம் 11872 வீடுகள் உள்ள நிலையில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்க்கொள்ள ( Domestic Breeding Checkers) DBC பணியாளர்கள் 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் மொத்தம் 20 DBC பணியாளர்களின் பணிக்காலம் கடந்த ஜுன் 2022 மாதத்தோடு பணி முடிவடைந்துள்ளது. இந்நிலையில் 2022-2023ம் ஆண்டிற்கான வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும் தருவாயில் உள்ளதால் தொடர்ந்து டெங்கு காய்ச்சல் பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. எனவே, கொசு புழுக்கல் உருவாகும் கொள்கலன்களை அழித்திடவும், கொசு புழுக்கல் உருவாகாத வண்ணம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவுவதை கட்டுபடுத்துவதற்கு DBC பணியாளர்கள் தேவைப்படுவதால் புதியதாக ஒப்பந்தபுள்ளி கோரும் வரை ஏற்கனவே பணி செய்து வந்த பணியாளர்களையே தகுதிவாய்ந்த பணியாளர்களை சுயஉதவிக்குழு மூலம் ஜுலை 2022 முதல் செப்டம்பர் 2022 வரை 89 நாட்களுக்கு 32 DBC பணியாளர்களை பணியமர்த்திக் கொள்வதற்கும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ. 9.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**கோப்பு எண். 126/2022/எச்1**

<u>அலுவலக குறிப்பு :</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 22

வடலூர் நகராட்சியின் வார்டு எண். 10 தங்கராசு நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த சிறுபாலம் மழை வெள்ளதால் உடைப்பு ஏற்பட்டு போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பொது மக்களின் போக்குவரத்து நலன் கருதி தங்கராசு நகர் பகுதியில் சிறுபாலம் அமைப்பதற்கு ரூ. 325000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.25 லட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண். 1560/2022/இ1**

அலுவலக குறிப்பு :

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

## பொருள் எண். 23

வடலூர் நகராட்சியின் வார்டு எண். 20 சந்தை, வார்டு எண் 25 நடேசன் நகர் மற்றும் வார்டு எண். 27 வெங்கட்டங்குப்பம் ஆகிய தெருக்களில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளின் சுற்றியுள்ள கூழாங்கற்கள் உள்வாங்கி உள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார் வந்தததை தொடர்ந்து நகரமன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் நேரடி ஆய்வு மேற்கொண்டதன் பேரில் ஆபாத்தான நிலையில் உள்ள ஆழ்துளை கிணற்றை சுற்றி கூழாங்கற்கள் கொட்டி ஆழ்துளை கிணற்றை பாதுகாக்க அறிவுறுத்தலின் பேரில் மேற்கண்ட 3 வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணற்றை கூழாங்கற்கள் கொட்டி பாதுகாத்து புனரமைப்பு பணிகள் மேற்க்கொள்ளவும் மற்றும் வார்டு எண். 25 சவேரியார் நகரில் உள்ள ஆழ்துளை கிணற்றுக்கு 90mm HDPE பைப் சப்ளை செய்வதற்கு ரூ.2.00 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு பொதுநிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண். 558/2022/இ1**

<u>அலுவலக குறிப்பு</u>

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி.**